42—

புதிய மாவட்டம்

***3079 திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது தொடர்பாக பதிலை அளிக்கிறேன். அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி புதிய மாவட்டம் அமைப்பதற்கான நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. அரசு வகுத்துள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் தனி மாவட்டமாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாவமெல்லாம் தீர்ப்பதற்கு பராசக்தி வருகிறார். பக்தர்களைக் காப்பதற்கு பரிவோடு வருகிறார். இன்னலெல்லாம் தீர்ப்பதற்கு இச்சா சக்தி வருகிறார். ஞான மழை பொழிவதற்கு ஞான சக்தி வருகிறார். நம்மையெல்லாம் காப்பதற்கு எங்கள் அம்மா வருகிறார் என்று (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த தேர்தலில் அம்மாவைப் போற்றி, அமோக வெற்றி தந்து, ஆறாம் முறையாய் அரியணையில் அமரவைத்து அழகு பார்த்த தமிழக மக்களை வணங்கி, கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை, கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை, நம்பிடவோ மெய்தனில்*

2016 ஆகஸ்ட் 9]

சக்தியில்லை, தலைவணங்க இருபொழுதும் போதவில்லை என்று தங்களைப் போற்றும் என் தொகுதி விருத்தாசலம் மக்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10-25

விருத்தாசலம் 16-வது வார்டு மேலவை பிரதிநிதியாய், கடலூர் மாவட்ட மாணவரணி துணைத் தலைவராய், விருத்தாசலம் நகர அம்மா பேரவை இணைச் செயலாளராய், 10 ஆண்டுகளாய் தொடர்ந்து நகர கழகச் செயலாளராய், தற்போது விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராய் பல்வேறு பரிணாமங்களை எனக்கு அளித்த, என் இறைவியே, உண்மையான விசுவாசமும், உண்மையான உழைப்பும் தங்கள்முன் என்றும் தோற்றதில்லை தாயே! அந்தச் சுவடிகளைப் படித்ததால்தான் இந்தப் பேரவையில் நான் இருக்கிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தாயாக எமை ஆளும் தமிழ்த் தெய்வமே! தென்னமுதாய் இருக்கின்ற தனி தெய்வமே! காயான உள்ளமதைக் கனியாக்குவீர்! அம்மா என்போர்க்குப் பிணி போக்குவீர்! வாயார உமைப் போற்ற வளம் கூட்டுவீர்! உவமையிலா உண்மைப்பொருளே! உலகாண்ட உயர் அறிவே! உண்மை வடிவான தாயே! உணர்பவரின் உள்ளத்தே உறவாடி மகிழ்பவரே! உம் திருத்தாழ் வணங்கி வினாவிற்குள் நுழைகின்றேன்! விடைதேட விழைகின்றேன்! தாயே, அருள்புரிக!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமான அம்மா திட்டம் தந்து, பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் மக்கள் நலத் திட்டங்கள் விரைந்து சென்று மக்களை அடைவதற்கும், 9 தொகுதிகள் கொண்ட கடலூர் மாவட்டத்தை, எளிமையாக மக்கள் பயன்பெறும் வகையில் இரண்டாகப் பிரித்தால் நலம் பயக்கும் என்ற நிலையில், விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அப்பகுதி மக்களின் நலன் கருதி, எதிர்காலத்திலாவது அமைத்துத் தந்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்பட்டதிலே, கடலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆட்சி எல்லை பிரிப்பதற்கான வரையறைகள் குறித்து அரசால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி கீழ்க்கண்ட அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

பரப்பளவு 2,500 சதுர கிலோ மீட்டர் முதல் 9,000 சதுர கிலோ மீட்டரும், மக்கள் தொகை 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரையும், கிராமங்கள் 200-க்குக் குறையாமலும் இருக்க வேண்டும். வட்டங்கள் 5-க்குக் குறையாமல் இருக்க வேண்டும். கோட்டங்கள் 2-க்குக் குறையாமல் இருக்க வேண்டும். தற்போதைய கடலூர் மாவட்டத்தில் 9 வட்டங்களும், 3 கோட்டங்களும் உள்ளன. இருந்தாலும், விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கினால், விருத்தாசலம், திட்டக்குடி மற்றும் வேப்பூர் வட்டங்களில் வசிப்பவர்களுக்கு பயனளிக்கக்கூடியதாக இருக்கும். ஆனாலும், விருத்தாசலம், திட்டக்குடி மற்றும் வேப்பூர் வட்டங்களின் மொத்தப் பரப்பளவே, 1,419.34 சதுர கிலோ மீட்டரும், 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி மொத்த மக்கள் தொகை 6 இலட்சத்து 85 ஆயிரத்து 324 ஆகும். மேற்படி அரசாணையின்படி புதிய மாவட்டம் அமைப்பதற்கு குறைந்தது 2,500 சதுர கிலோ மீட்டர் பரப்பு, 5 வட்டங்கள், 2 கோட்டங்கள் மற்றும் 10 இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும். அதனால், விருத்தாசலம் மாவட்டத்தை உருவாக்குவதற்கு மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் விருத்தாசலத்தை தனி மாவட்டமாக அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் வட்டம், வேப்பூர் வட்டம், திட்டக்குடி வட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம் ஆகிய வட்டங்களை இதோடு இணைத்தால், நிபந்தனைகள் பூர்த்தியாகும் என்பதால்

2016 ஆகஸ்ட் 9]

வாய்ப்பிருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரப்பளவு மற்றும் மக்கள் தொகை அளவுகோல் பூர்த்தியாகவில்லை. ஆகவே, எப்போது அவை பூர்த்தியாகின்றனவோ அப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் பெரியார், வாலிப அண்ணா, இளைய கலைஞர், எங்களுடைய தளபதி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய வேலூர் மாவட்டம், 13 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி, 20 ஊராட்சி ஒன்றியங்களையும், 11 நகராட்சிகளையும், 12 பேரூராட்சிகளையும், 743 ஊராட்சிகளையும் கொண்டு, 11 தாலுகாக்கள் உள்ள பெரிய மாவட்டமாகும். திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில், மாவட்ட அளவில் செயல்படக்கூடிய மின்சாரத் துறை, காவல் துறை, வனத் துறை, கல்வித் துறை, நீதித் துறை, மருத்துவத் துறை அலுவலகங்கள் மற்றும் சார் ஆட்சியர் அலுவலகம் உள்ளது. சார் ஆட்சியர் குடியிருப்புப் பகுதியில் சுமார் 20 ஏக்கர் நிலம் உள்ளது. இது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைக்கப் போதுமானது. மாவட்டத்தின் ஓர் எல்லையிலிருந்து கடைசிவரை சென்று வர சுமார் 250 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலிருந்து அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டனவோ, தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் எப்படி உருவாக்கப்பட்டதோ, அதேபோன்று பொதுமக்களின் நலன் கருதி, எங்களுடைய*

மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரை தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 1991 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன; 1993 ஆம் ஆண்டு பழைய தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன; 1995 ஆம் ஆண்டு திருச்சி மாவட்டத்திலிருந்து கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன; 2004 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிக்கப்பட்டது. இப்படி புதிய மாவட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உருவாக்கித் தந்தார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான தனி மாவட்டம் உருவாக்குவது தொடர்பான வினாவிற்கு, நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற அளவுகோல் பூர்த்தியாகிறபட்சத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால், பரப்பளவு, மக்கள்தொகை, கிராமங்கள், வட்டங்கள், கோட்டங்களின் எண்ணிக்கை இவை பூர்த்தியாகின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைக்காமலேயே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களுடைய வசதிக்காக மாவட்டங்களைப் பிரித்துத்

2016 ஆகஸ்ட் 9]

தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அளவுகோல் பூர்த்தியாகின்றபோது, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், திருக்கோவிலூர் வட்டம், கண்டாச்சிபுரம் வட்டம் என இரண்டு வட்டங்களாக சமீபத்தில் பிரிக்கப்பட்டது. பிர்காக்களை அடிப்படையாகக் கொண்டே வட்டங்கள் பிரிக்கப்படுகின்றன. தொகுதி சீரமைப்பிலேகூட பிர்காக்களை அடிப்படையாக வைத்துத்தான் பிரித்தார்கள். நானும் அந்தக் குழுவிலே இருந்தேன். 'அவ்வாறு பிரிக்கவேண்டாம், ஒன்றியத்தை அடிப்படையாக வைத்து பிரிக்கவேண்டும்' என்று நாங்கள் சொன்னோம். ஆனால், அந்தக் கருத்து கேட்கப்படவில்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், பிர்காக்களை அடிப்படையாக வைத்து பிரிப்பதைவிட, தயவுசெய்து தாலுகா தலைநகரங்களுக்கு இடையே உள்ள தூரத்தை வைத்து ஊராட்சிகளைப் பிரிக்கவேண்டும். குறிப்பாக, மணம்பூண்டி வெளந்தை, கழுமரம் போன்ற கிராமங்களெல்லாம் திருக்கோவிலூரைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தன. அவை 2 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கின்றன. ஆனால் தற்போது அவற்றையெல்லாம் கண்டாச்சிபுரம் வட்டத்தில் சேர்க்கின்ற காரணத்தினால், அப்பகுதி மக்கள் 15 கிலோ மீட்டருக்குமேல் அதிக தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதுகுறித்து பரிசீலனை செய்து, பிர்காவின் அடிப்படையில் பிரிக்காமல், தூரத்தை அடிப்படையாகக்கொண்டு வட்டங்களைப் பிரிப்பீர்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிர்காக்களை அடிப்படையாக வைத்து வட்டங்களைப் பிரிக்க வேண்டாம் என்று நான்கூடச் சொன்னேன், கேட்கவில்லை, என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர் தெரிந்து சொல்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவர் சொல்கிற தகவல் சரியான தகவல் இல்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வட்டங்களைப் பிரிப்பதிலே நிலையான அணுகுமுறையை உருவாக்கவேண்டுமென்றும், வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், முன்மாதிரியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். பொதுமக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட ஏதுவாக, மக்கள்தொகை, நிலப்பரப்பு மற்றும் வருவாய்க் கிராமங்களின் அடிப்படையிலேதான் புதிய வட்டங்கள் உருவாக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனடிப்படையிலேதான், வருவாய்த் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத வகையிலே, வருவாய்த் துறையினுடைய மேம்பாட்டிற்காகவும், மக்கள் எளிதிலே வருவாய்த் துறையை அணுகவும், 65 புதிய வட்டங்களையும், 9 கோட்டங்களையும் உருவாக்கித் தந்த முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற தகவல் சரியான தகவல் இல்லை. வருவாய்க் கிராமங்கள், பரப்பளவு மற்றும் மக்கள்தொகை ஆகியவற்றின் அடிப்படையிலேதான் புதிய வட்டங்கள் பிரிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். உறுப்பினர் உட்கார்ந்துகொண்டு பேசினால் எப்படி? (குறுக்கீடு) இதுவெல்லாம் என்ன முறை? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து ஆதாரங்களையும் வைத்துக்கொண்டு பதில் சொல்கிறார். நீங்கள் உட்கார்ந்துகொண்டே பேசினால் என்ன அர்த்தம்? உறுப்பினர்கள் இவ்வாறெல்லாம் பேசாதீர்கள்.*

2016 ஆகஸ்ட் 9]

முற்பகல் 10-35

வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

43—

சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***2737 திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டையிலுள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் மதுக்கூரிலுள்ள சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதியில், பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர் அலுவலகமும், அதன் கட்டுப்பாட்டில் 12 சார்பதிவாளர் அலுவலகங்களும் உள்ளன. இவற்றில் மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகமும் ஒன்றாகும். பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர் மற்றும் மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் மூச்சு, 10 கோடி தமிழர்களின் பாதுகாவலர், ஒப்பாரும் மிக்காரும் இல்லா*